# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)

## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 25.11.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

இக்காலத்தில் ஆப்பிரிக்க நாடுகள் சிலவற்றில் சுதந்திர தின விழா கொண்டாடப்படுகிறது. இந்த விழாக்களைக் கொண்டாடுவதில் நமது ஆப்பிரிக்கப் பிரிவு (PAN Africa Association) பங்கு வகிக்கிறது. இங்கு இந்த அமைப்பு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் காலத்தில் உருவாக்கப்பட்டது. இது அஹ்மதி சகோதரர்களின் அமைப்பு ஆகும். எவ்வாறிருப்பினும் நான் கூறியது போன்று நமது அமைப்பும் இந்த ஆப்பிரிக்க நாட்டு மகிழ்ச்சியில் பங்கு பெறுகின்றது. நிகழ்ச்சிகளும் நடத்துகின்றன. அதனையொட்டி அங்கு நடத்தப்படவிருக்கிற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று என்னிடமும் கூறினார்கள். நிகழ்ச்சிகள் நடக்கும் போது இன்ஷா அல்லாஹ் நான் அதில் பங்கெடுப்பேன். ஆனால் இன்று சுதந்திரம் தொடர்பாக சிறிது கூற விரும்புகிறேன்.

அடிமைத்தனத்திலிருந்து விடுதலை, மார்க்கச் சுதந்திரம் மற்றும் சிந்தனைச் சுதந்திரம் ஆகியவை பெரும் அருளாகும். ஆப்பிரிக்கா ஒரு மகத்தான நாடாகும். இங்குள்ள நாடுகள் மிக நீண்ட காலம் அதிகாரம் செலுத்தப்பட்ட சமுதாயமாக அடிமைப்பட்டுக் கிடந்தன. எனவே இந்த நாடுகள் விடுதலைநாள் பொன்விழா கொண்டாடுவது அவர்களைப் பொருத்தவரை மிக முக்கியத்துவம் வாய்ந்ததும் அவர்களின் உரிமையும் ஆகும். அல்லாஹ் 50 – 60 ஆண்டுகளுக்கு முன்பு இவர்கள் பெற்ற இந்த சுதந்திரத்தை உண்மையான சுதந்திரமாக இருக்கச் செய்வானாக! அல்லாஹ் மீண்டும் ஒருமுறை அடிமைத்தனத்தில் அவர்கள் சிக்காமல் இருக்கச் செய்வானாக! நல்ல நிய்யத்துடனும் ஈமானுடனும் அவர்கள் தாம் பெற்ற சுதந்திரத்திலிருந்து பயனடைந்து கொண்டிருக்கட்டும். அவ்வாறாயின், வரும் ஆண்டுகளில் ஆப்பிரிக்கக் கண்டம் உலகின் வழிகாட்டியாக ஆவதும் தூரமான ஒன்றல்ல. மார்க்கத்தின் வரலாற்றைக் கவனித்தால் மார்க்கத்தின் நிறுவனர்கள் அல்லது அல்லாஹ்வின் புறமிருந்து வரும் போது அவர்களின் முக்கியமான வேலைகளுள் ஒன்று விடுதலை அளிப்பதாகும். அது அநியாயக்கார அரசனிடமிருந்தோ அல்லது ஃபிர்அவ்னிடமிருந்தோ அல்லது மார்க்கத்தின் பெயர்தாங்கிகளின் சுயநலத்திற்காக உருவாக்கப்பட்ட சடங்கு சம்பிரதாயங்கள் மற்றும் மத வழிபாடுகளின் அரிகண்டத்தை கழுத்தில் மாட்டுவதில் இருந்தோ அல்லது இந்த எல்லா வகையான அடிமைத்தனத்திலிருந்தும் சுதந்திரம் பெறுவது நபிமார்கள் மூலமே நடைபெறுகின்றன. ஆனால் துரதிஷ்டம்! பல சமுதாயங்கள் இதன் உண்மைத்துவத்தை உணரவில்லை. சுதந்திரத்தின் உண்மையான கொடியை ஏந்தி நிற்பவர்களை மறுத்து விட்டு தமது உண்மையான சுதந்திரத்தை இழந்தது மட்டுமின்றி இறை பிடியிலும் மாட்டிக் கொண்டு அழிந்து விட்டனர். அவர்கள் உலகியல் ஆட்சியாளர்களுக்கு, ஆட்சியாளர்களுக்கெல்லாம் ஆட்சியாளனை விட முக்கியத்துவம் தந்து விட்டனர். சுதந்திரத்தின் பல புதிய அத்தியாயங்களை திறக்கக்கூடிய அடிமைத்தனத்திற்குப் பதிலாக அவர்களுக்கு முக்கியத்துவம் தந்து விட்டனர். விடுதலைக்கு அவர்கள் தரும் முன்னுரிமை மாறியதால் விடுதலையும் கையில் இருந்து போயிற்று. அது மட்டுமின்றி உலகமும் மறுமையும் அழிந்து விட்டது. எனவே சுதந்திரத்தின் தத்துவத்தின் ஆழத்தில் சென்று பார்த்தால் அசல் சுதந்திரம் நபிமார்கள் மூலமே கிடைக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக நமக்கு முன்னால் இருக்கின்ற கதிர்கள் தொலை தூரம் வரை பரவியுள்ள விடுதலையின் சூரியன் மேலும் எல்லா வகையான சுதந்திரத்தையும் உள்ளடக்கியவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களேயாவர்கள். அவர்கள் வெளிப்படையான அடிமைத்தனத்திலிருந்து விடுதலைப் பெற்றுத் தந்தார்கள். மனிதன் தனது கழுத்தில் போட்டுக் கொண்டிருக்கிற பல்வேறு வகையான அரிகண்டங்கள் இருந்தும் விடுதலை பெற்றுத் தந்தார்கள். அதுமட்டுமின்றி அவர்களுடன் உண்மையான முறையில்

இணைந்து இருப்பது இன்றும் கூட சுதந்திரம் பெற்றுத் தரும் பெரும் வழிமுறையாக இருக்கின்றது. அவர்களை அல்லாஹ் காத்தமுன்னப்பிய்யீன் என்ற பட்டத்தால் சிறப்பித்தான். அவர்களின் காத்தமிய்யத்களையும் உள்ளடக்கியவாறு முத்திரை பொதிந்தது. அல்லாஹ்வுடைய சாட்சி மற்றும் அறிவிப்பிற்குப் பிறகு எந்த சான்றோரின் உள்ளத்திலும் முஹம்மதிய்ய முத்திரையே எல்லா வகையான முழுமைகளின் மீதும் முத்திரை பதிக்கத் தகுந்தது என்பதில் எந்த சந்தேகமும் ஏற்பட முடியாது. இந்த பரபூரணத் தன்மைகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மூலமே நிறைவு பெறுகின்றன. எனவே ஒவ்வொரு பணி மற்றும் விவகாரங்களின் உச்சகட்டம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களே ஆவார்கள். எனவே விடுதலை பெற்றுத் தருவதில் அற்புதங்கள் அவர்களின் மூலமே நிறைவடைந்துள்ளது. இந்த அற்புதங்கள் எவ்வளவு மகத்தான மகத்துவத்துடன் நிறைவேறியது என்பதை உலகம் கண்டது. இப்போது வரை அவர்களை உண்மையான முறையில் பின்பற்றுபவர்கள் இவை நிறைவேறியிருப்பதை பார்க்கின்றனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கியுள்ள முழுமையான வேதம் காத்தமுல் குதுப் என்று அழைக்கப்படுகிறது. அதில் விடுதலை பற்றி பல்வேறு கோணத்தில் விளக்கப்பட்டுள்ளது. பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அழகிய முன்மாதிரி அந்த உன்னத போதனைக்கு மேலும் மெருகூட்டியது. அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் கூறுகிறான்:

ஃபக்கு ர(க்)கப (90:14) – கழுத்தை விடுவித்தல் அல்லது விடுதலை அளித்தல் அல்லது விடுதலைக்கு உதவுதல் என்றும் கூறலாம். பிறகு அல்லாஹ் கூறுகிறான்: மற்றொரு வசனத்தின் ஒரு பகுதியைப் படிக்கிறேன்.

வஆ(த்)தல் மால அலா ஹுப்பிஹீ ஸவில் குர்பா வல்ய(த்)தாமா வல்மஸாகீன வப்னஸ் ஸபீலி வஸ்ஸாயிலீன வஃபிர்ரிகாப் (2:178) – பொருட்களை வழங்குங்கள்; அவன் மீது பிரியம் கொண்டு, உறவினர்களுக்கும் அனாதைகளுக்கும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் கேட்பவர்களுக்கும் கழுத்துக்களை விடுவிப்பதற்காகவும் அதாவது அடிமைகளை விடுதலை செய்யவும் செலவிடுங்கள். இதற்கு முன்னர் கூறப்பட்டு வருகிற கருத்துக்களை கவனத்தில் கொள்ளுங்கள். அதில் கூறப்பட்டுள்ளது. இவையே சிறந்த நற்செயலாகும். அல்லாஹ், மறுமை நாள், மலக்குகள், வேதங்கள் மற்றும் நபிமார்கள் மீது ஈமான் கொண்ட பிறகு இந்த நன்மைகள்தான் அடியார்களை இறைவன் பக்கம் நெருங்கச் செய்கின்றன. இவற்றில் அடிமைகளை விடுதலை செய்வதும் ஒன்றாகும். எனவே ஈமானில் நிலைத்திருக்க நன்மையில் முன்னேற நன்மையின் உயர்ந்த முன்மாதிரியைக் காட்ட அடிமைகளை விடுவிப்பது அல்லது ஒரு மனிதனை விடுதலை செய்ய வைப்பது பெரும் நன்மையான காரியமாகும். ஹதீஸ்களிலும் இதற்கு நிறைய உதாரணங்கள் கிடைக்கின்றன.

ஒரு அறிவிப்பில் வருகிறது. இது புகாரியிலுள்ள ஹதீஸ் ஆகும். ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு முஸ்லிம் அடிமைகளை விடுதலை செய்தால் அல்லாஹ் அவரை நரகத்திலிருந்து முற்றிலுமாக விடுதலை அளிப்பான். பிறகு இஸ்லாத்தில் பரிகாரமாக அடிமைகளை விடுதலை செய்யுமாறு கூறப்பட்டுள்ளது. திருக்குர்ஆனில் எண்ணற்ற இடங்களில் இவ்வாறு வருகிறது. மூஃமின் தவறுதலாக மற்றொரு மூஃமினை கொலை செய்து விட்டால் அதற்கு பரிகாரமாக அடிமையை விடுதலை செய்ய வேண்டும். அத்துடன் ஈட்டுத்தொகை செலுத்த வேண்டும்.

மூஃமின் கொலை செய்யப்பட்டால் மட்டும்தான் இந்த தண்டனை என்று கூறவில்லை. மூஃமின் கொலையுண்டால் மட்டுமே அடிமையை விடுதலை செய்ய வேண்டும் என்று வரவில்லை. மாறாக, கூறப்பட்டிருப்பதாவது, ஒரு சமுதாயத்துடன் ஒப்பந்தம் இருக்கும்போது அவர்களில் உள்ள காஃபிர் உங்களால் கொலை செய்யப்பட்டால் ஒரு அடிமையை விடுதலை செய்ய வேண்டும். பிறகு சத்தியமிட்ட பின்னர் அதனை முறிப்பவருக்கு தண்டனையாக அவரவரது தகுதிக்கேற்ப பல்வேறு சாத்தியக்கூறுகள் கூறப்பட்டுள்ளன. கொலை செய்ததற்குரிய தண்டனைய அனுபவித்தல் அல்லது அதற்குப் பதிலாக அடிமையை விடுவித்தல் என்று இஸ்லாம் கூறுகிறது. எனவே பல்வேறு சந்தர்ப்பங்களில் அடிமைகளை விடுவிப்பது பற்றி கூறப்பட்டுள்ளது. காரணம் இஸ்லாம் அடிமைகளை சிறிது சிறிதாக குறைத்து அவர்கள் இல்லாமல் ஆக்கிவிட

விரும்பியது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் அதற்கு முன் அடிமைகளை வைத்திருக்கும் வழக்கம் இருந்தது. இஸ்லாம் வந்த பிறக இந்த அடிமை வழக்கத்தை ஒழிப்பதற்காக பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்திக் கூறியுள்ளது. அதுமட்டுமின்றி ஹதீஸிலும் வருகிறது.

ஒரு அறிவிப்பில் அஸ்மா பின்த் அபிபக்கர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களிடம் கூறி வந்தார்கள். சூரிய கிரகணம் ஏற்பட்டால் கூட அடிமையை விடுதலை செய்யுங்கள். அதாவது வசதி படைத்தவர் வாய்ப்புள்ளவர் நிச்சயமாக அவ்வாறு செய்ய வேண்டும்.

பிறகு அடிமைகளின் கண்ணியம் மற்றும் உரிமையை அன்னார் இவ்வாறு பாதுகாத்தார்கள்.

அறிவிப்பில் வருகிறது. ஏழு சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் அனைவரும் சம உரிமை பெற்ற அடிமைகளாக இருந்தனர். ஒருமுறை எஜமானர் ஒரு அடிமையின் மீது கோபம் கொண்டு கன்னத்தில் அறைந்து விட்டார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அது தெரிய வந்ததும் அன்னார் கூறினார்கள்: அந்த அடிமையை விடுதலை செய்து விடுங்கள். உங்களுக்கு இந்த அடிமையின் மீது எந்த உரிமையும் இல்லை. ஏனெனில் உங்களுக்கு அடிமைகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்ளத் தெரியவில்லை. சுருக்கமாக அக்காலத்தினை நாம் பார்த்தோமென்றால் அடிமைகளை வைத்திருப்பது முக்கியமான விஷயமாகவும் இருந்தது. செல்வந்தர்களுக்கு அது பெரும் செல்வமாகவும் இருந்தது. ஒருவரிடம் எவ்வளவு அடிமைகள் உள்ளனரோ அந்த அளவுக்கு அவர் பணக்காரராகக் கருதப்பட்டார். பணக்காரர்கள் அடிமைகளை வைத்திருந்தனர் என்பது தெரிய வருகின்றது. அப்போது அக்கட்டளையிடப்பட்டது. நீங்கள் ஈமான் என்ற அந்த அசல் செல்வத்தை விரும்பினால் அது வேண்டுமென்றால் நீங்கள் அடிமைகளை விடுதலை அளிப்பதே சிறந்தது. இந்தக் கட்டளையின் கீழ் சஹாபாக்கள் முடிந்தவரை டஜன் கணக்கிலிருந்து ஆயிரக்கணக்கான எண்ணிக்கையிலான அடிமைகளை விடுதலை செய்தார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃப்வான் (ரலி) பற்றி வருகிறது. அன்னார் ஒரேயொரு சந்தர்ப்பத்தில் மட்டும் 20 ஆயிரம் அடிமைகளை விடுதலை செய்தார்கள். அதுபோக பல்லாயிரம் பேரை பல்வேறு சந்தர்ப்பங்களில் விடுதலை செய்துள்ளார்கள். சிலர் அவர்களின் வசதிக்கேற்ப டஜன் கணக்கிலும் செய்துள்ளார்கள். வேலை செய்வதற்காக அடிமைகளை வைத்திருந்தவர்களுக்கும் இஸ்லாமிய போதனை என்னவென்றால் அவர்களை உங்கள் சகோதரன் போன்று நடத்துங்கள். நீங்கள் உடுப்பதை அவர்களுக்கும் உடுத்துங்கள். நீங்கள் உண்பதை அவர்களுக்கும் உண்ணத் தாருங்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய சொந்த நடைமுறையும் எதுவென்றால் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களை திருமணம் செய்த பிறகு அவர்கள் அடிமைகள் மற்றும் செல்வங்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கொடுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அந்த அடிமைகளை விடுதலை செய்து விட்டார்கள். ஸைத்பின் ஹாரிஸ் என்ற அடிமையை தனது வளர்ப்பு மகன் என்று அழைத்தார்கள். அவருடன் எந்த அளவுக்கு பரிவுடன் நடந்து கொண்டார்கள் எனில் அவரது சொந்த பெற்றோர் வந்து அழைத்த போது கூட ஹஸ்ரத் ஸைத் பின் (ரலி) அவர்களுடன் செல்ல மறுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இந்த அழகிய நடைமுறை தான் அவர்களது முழுமையின் படித்தரம் ஆகும். இதனால் தான் அவர் (ஸைத்) விடுதலை அடைவதை விட அடிமையாக இருப்பதற்கு முன்னுரிமை வழங்கினார். இரத்த சொந்தம் மற்றும் பிரியத்தை பொருட்படுத்தவில்லை. எனவே இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்பவர் இதில் ஆயிரத்தில் என்ன இலட்சத்தில் ஒரு பங்கு கூட இவ்வாறான உதாரணத்தைக் கூட எடுத்து வைக்க இயலாது. எவர் இந்த அளவுக்கு அடிமைகளை விடுவிக்க ஏற்பாடு செய்துள்ளார்? மேலும் மனிதனின் விடுதலைக்கான வழியை அமைத்துத் தந்துள்ளார்?

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம்மை ஏற்றுக் கொண்டவர்களிடம் கூறினார்கள். உங்கள் அடிமைகளை பணி செய்யும் போது நல்ல முறையில் நடத்துங்கள். கடினமான பணியை அவர்களிடம் கொடுத்தால் நீங்கள் அதில் கைகொடுங்கள். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அடிமைத்தனத்தின்

இலக்கணத்தையே மாற்றி விட்டார்கள். இதன் விளைவாகத்தான் ஒரு இத்தாலிய ஆராய்ச்சியாளர் டாக்டர் ரிக்ளெரி எழுதுகிறார். அடிமை வழக்கம் மனிதகுலம் தோன்றிய நாளிலிருந்து உள்ளது. இப்போதும் எஞ்சியுள்ளது. சமுதாய ரீதியிலும் சரி, முஸ்லிம்கள் காட்டரபியாக இருந்தாலும் சரி, அல்லது நாகரிகமுள்ளவர்களாக இருந்தாலும் சரி மற்றவர்களை விட அடிமைகளை நடத்தும் முறை பன்மடங்கு சிறந்ததாக உள்ளது.

கிழக்கத்திய நாடுகளில் அடிமைகளை நடத்தும் முறையை அமெரிக்காவில், நூறு வருடங்களுக்கு முன்பிருந்த அடிமை முறையின் நிலையுடன் ஒப்பிடுவது அநீதியாகும். நபிமொழிகளில் எந்த அளவுக்கு மனிதாபிமானம் காணப்படுகிறது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இது எனது அடிமை என்று கூறாதீர்கள். இவர் எனது மகன் என்று கூறுங்கள். இது எனது அடிமைப் பெண் என்று கூறாதீர்கள். இது எனது மகள் என்று கூறுங்கள்.

மேலும் எழுதுகிறார்: வரலாற்று அடிப்படையில் இந்த சம்பவங்களை ஆய்வு செய்தால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இவ்விஷயத்தில் மகத்தான சீர்திருத்தம் செய்துள்ளார்கள் என்று தெரிய வரும். இஸ்லாத்திற்கு முன்னர் கடன்பட்டவர் கடனை திரும்ப செலுத்த முடியாத நிலையில் சுதந்திரமான மனிதனின் சுதந்திரம் பறிபோகும் சாத்தியம் இருந்தது. கடன்பட்டவர் கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் கடனை திருப்பித் தரும் வரை கடன் கொடுப்பவருக்கு அடிமையாக வேண்டிய சாத்தியமும் இருந்தது.

அவர் எழுதுகிறார்: ஆனால் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு எந்த முஸ்லிமும் எந்த சுதந்திர முஸ்லிமையும் அடிமையாக்க முடிந்ததில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அடிமைத்தனத்தை ஓர் எல்லைக்குள் கொண்டு வந்தது மட்டுமின்றி அன்னார் இவ்விஷயத்தில் ஏவல் விலக்கல் சட்டமே உருவாக்கினார்கள். முஸ்லிம்களிடம் கூறினார்கள். உங்கள் பாதத்தை முன்னோக்கி வையுங்கள். எதுவரையெனில் சிறிது சிறிதாக எல்லா அடிமைகளும் சுதந்திரம் பெற்று விட வேண்டும். புரொபஸர் கிளேரி உடைய இத்தாலிய நூல் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஒரு காலத்தில் அமெரிக்காவின் அஹ்மதிய்யா ஜமாஅத் இந்நூலை வெளியிட்டது. அதில் இஸ்லாமிய போதனை பற்றி நல்ல முறையில் விளக்கப்பட்டுள்ளது. அதனை மீண்டும் வெளியிட வேண்டும். யாருடைய பெயரும் உரிமை இல்லாத பட்சத்தில் அமெரிக்கவாசிகளுக்கு அனுமதி கிடைத்திருந்தால் அதனை வெளியிட வேண்டும். இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபனை செய்கின்றவர்களின் வாயை அடைப்பதற்கு அதுபோதுமானது. இந்த போதனை, முன்மாதிரி ஆகியவற்றை மற்றவரும் ஒப்புக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை. இந்த மகத்தான போதனை – நடைமுறை மனிதனில் சுதந்திரத்தின் உண்மை நிலையாகும். திருக்குர்ஆன் மற்றும் ஹதீஸிலிருந்து நான் சில உதாரணங்களை வழங்கியுள்ளேன். இதுபற்றி எண்ணற்ற கட்டளைகளும் வழிகாட்டல்களும் நமக்கு கிடைக்கின்றன. இதுவே உண்மையான போதனையாகும். இதனை செயல்படுத்துவதன் மூலமே உலகிற்கு சுதந்திரம் கிடைக்க முடியும்.

அமைதி, நீதி, சீர்திருத்தம் நிலைபெற முடியும். அமெரிக்காவில் விடுதலை கிடைத்துள்ள நாட்டிலுள்ள அஹ்மதிகள் இந்த போதனையைப் பரப்புங்கள். நடைமுறைப்படுத்துங்கள். மக்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய அடிமைத்தனத்தின் கீழ் கொண்டு வாருங்கள். அதன் மூலம் அவர்களுக்கு அடிமையின் உண்மை நிலை தெரியட்டும். ஒருமுறை பொன்விழா கொண்டாடுவதால் சுதந்திரம் நிலைபெற்று விடாது. இந்த உண்மையை புரிந்த பிறகுதான் சுதந்திரம் நிலைபெறும். ஆட்சியாளர்களும் சரி, பொதுமக்களும் சரி, எவ்வாறு நாம் இந்த சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டம் என்பதை சிந்திக்க வேண்டும். மேலும் அந்த வழிமுறை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியிலும் திருக்குர்ஆனின் போதனையிலும் தான் கிடைக்கும். கிளேரி சாஹிப் முஸ்லிம்களை அடிமையாக்க முடியாது என்று எழுதியுள்ளார். ஆனால் உண்மையான இஸ்லாமிய சமுதாயத்திலும் ஒருபோதும் எவரும் அடிமையாக முடியாது. இதுவும் ஒரு முஸ்லிமுக்கு மிகவும் முக்கியமாக நினைவில் கொள்ளத்தக்கதாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மரணிப்பதற்கு முன் உம்மத்திற்கு கடைசி போதனை செய்தார்கள். அது தொழுகை மற்றும் அடிமைகள் பற்றியதாகும். எனது போதனைகளை மறந்து விடாதீர்கள் என்பதாகும். ஆனால் முஸ்லிம்களில் குறிப்பாக செல்வந்தவர்களுடைய துரதிஷ்டம் அவர்கள் இந்த இரு மார்க்கப் போதனையையும் மறந்து விட்டார்கள். அவர்களிடம் தொழுகையிலும் ஆர்வம் இல்லை. இறையச்சம் தென்படவில்லை. அடிமைத்தனத்தை அகற்றும் முயற்சியும் இல்லை. நேரடியாக அடிமைகளை விற்று வாங்கும் நடைமுறை இன்று இல்லைதான். எனினும் அரசுகளின் பெயரால் பொதுமக்கள் அடிமைப்படுத்தப்படுகின்றனர். சில நாடுகளிலும் ஏற்பட்டுள்ள நிம்மதிக் குலைவும் கூச்சலும் இதனாலலேயே உருவாகியுள்ளன. சில முஸ்லிம் அரபு நாடுகளில் இந்நிலை உள்ளது. பொதுமக்களிடம் நாம் அடிமைகளாக நடத்தப்படுகிறோம் என்ற உணர்வு ஏற்பட்டுள்ளது. நம்மிடம் ஓர் அரசு ஜனநாயகம் என்ற பெயரில் வருகிறது. பிறகு வாழ்நாள் முழுவதும் அந்த ஆட்சியாளரே பதவியில் இருக்க முயற்சி செய்யப்படுகிறது. பிறகு அவரது சந்ததிகள் ஆட்சியைக் கைப்பற்றுகின்றனர். சுயநலமிகள், துதிபாடிகள் இவர்களை சுற்றிக்கூடி இவர்களின் முன்னுரிமைகளையும் மதிப்பீடுகளையும் மாற்றி விட்டனர். பிறகு ஆட்சியை நிலைநாட்ட எல்லா முயற்சியும் செய்கின்றனர். தமது பொதுமக்கள் மீதே துப்பாக்கிக் குண்டுகள் செலுத்தப்படுகின்றன. பிறகு எதிரி சக்திகள் அல்லது இஸ்லாத்தின் பகை சக்திகள் அல்லது சுயநல சக்திகள் தமது சுயநலத்திற்காக நாட்டின் செல்வத்தை அபகரிப்பதற்காக பொதுமக்களின் தரப்பிலிருந்து அரசாங்கத்தின் அநீதியிலிருந்து விடுதலை பெறுவதற்காக நடத்தப்படும் கிளர்ச்சி நெருப்பிற்கு காற்று வீசுகின்றனர். மார்க்கத்தின் பெயரால் சக்தி சூழல் ஆரம்பித்து நாட்டை நூறு ஆண்டுகள் பின்னுக்கு தள்ளி விடுகின்றது. மேலும் விடுதலைக்காக முயற்சி செய்த பொதுமக்களை மேலும் அடிமைத்தனத்திலிருந்து தள்ளி விடுகின்றது.

பிறகு தம்மவரின் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு மற்றவரின் அடிமைத்தனத்திற்கு உட்படுத்துகின்றனர். நேரடியாக இல்லா விட்டாலும் இன்னொன்றின் மூலமாகவாவது அவ்வாறு ஆகி விடுகின்றனர். நான் முன்னரே கூறி விட்டேன். சில வலிமை வாய்ந்த சக்திகள் அந்த ஆட்சிகளுக்கு வேண்டியதைத் தந்து, பல வருடங்களுக்கு ஆட்சியில் அமர வைக்கின்றனர். பொதுமக்களின் சுதந்திரம் அழிக்கப்படுவதை சிறிதும் பொருட்படுத்துவதில்லை. அந்த அரசுகளிடமிருந்து தமக்கு பயன் முடிந்து போய் விட்டால் பொதுமக்களின் சுதந்திரம் என்ற பெயரில் அந்த ஆட்சிகளை கவிழ்த்து விடுகின்றனர். அவர்களை கீழே இறக்கி விடுவதற்கான முயற்சிகளை செய்கின்றனர். ஆனால் இதுதான் இப்போதைய நிலை – ஓர் ஆட்சியை மாற்றி விட்டு புதிய ஆட்சி உருவாகியுள்ளது. இதனைப் பார்த்து இந்த சக்திகள் சங்கடப்படத் தொடங்கி உள்ளன. நமது விருப்பப்பட்ட ஆட்சி வரவில்லையே என்று நினைக்கின்றன. சில இடங்களில் அவை விரும்பும் மாற்றங்கள் ஏற்படவில்லை. அவை விரும்பும் மாற்றம் ஏற்படாத நிலையிலும் சங்கடம் அடைகின்றன. பிறகு கிளர்ச்சி மற்றும் நயவஞ்சகத்தின் தொடர் ஆரம்பமாகி உள்ளன. இன்னும் சொல்வதாயின் சில இடங்களில் ஆரம்பமாகி விட்டது. பொதுமக்களும் தவறான புரிதலால் இரையாக்கப் படுகின்றனர். ஓர் அரசின் அடிமைத்தனத்திலிருந்து இன்னொரு அரசின் அடிமைத்தனத்திற்குள் போகின்றனர். இப்போது உணர்வு ஏற்படுகிறது. சில இடங்களிலும் அதற்குள் போய்க் கொண்டிருக்கின்றனர். நாட்டின் செல்வம் பொதுமக்களின் முன்னேற்றத்திற்காக அவர்களின் உரிமையையும் நீதியையும் பெற்றுத் தருவதற்காக அவர்களை கல்வியாளர்களாக்குவதற்காக செலவு செய்யப்படவில்லை. செலவு செய்யப்படப் போவதுமில்லை. வரும் அரசும் கூட தனது நலனைக் கொண்டே வருகிறது. பொதுமக்களிடம் ஏழ்மை, குறைந்த வாழ்க்கைத்தரம் முதலிலும் இருந்தது. வருங்காலத்திலாவது அகலும் என்ற எதிர்பார்ப்பு இருக்கின்றது. ஆனால் வருங்காலத்திலும் இவ்வாறே இருக்கும். சிறிது காலத்திற்குப் பிறகு நீங்களே பார்ப்பீர்கள். ஏனென்றால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய போதனையை ஆட்சியாளர்கள் நடைமுறைப்படுத்தவில்லை. முஸ்லிம் என்று கூறுகின்றனர். ஆனால் அதன்படி அமல் செய்வதில்லை. முற்காலத்தில் தனது செல்வத்தின் பலனாக ஒருவர் அடிமையை வைத்திருந்தார். இன்று நாட்டின் செல்வத்தை பொதுமக்களை அடிமையாக்குவதற்காக பயன்படுத்தப்படுகிறது. இப்போது ஊடகங்களும் பேசத் தொடங்கியுள்ளன. வெளிப்படுத்துகின்றன.

நிழற்படங்களும் வருகின்றன. எண்ணெய் வள நாடுகளிலும் வறுமை உள்ளது. ஒருபுறம் தங்கத்திலான மாளிகைகள்; மறுபுறம் ஒருவருக்கு இருவேளை வயிறார உணவு இல்லை. எனவே உரிமைகளை அபகரித்துப் பொதுமக்கள் அடிமையாக்கப்படுகின்றனர். அடிமையாக்கப்பட்டு விட்டது. எங்கே அந்தக்காலம்! ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிறித்தவப் பகுதியிலுள்ள தனது ராணுவத்தை திரும்ப அழைக்க நேர்ந்தது. அப்போது எதிரிகளின் ஆற்றலின் காரணத்தால் முஸ்லிம்கள் அப்பகுதிகளில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முடியாமல் இருந்தது. கிறித்தவர்கள் தமது பாதுகாப்புக்காகவும் தமது உரிமையைப் பெறவும் ஜிஸ்யா வரியாகத் தந்த தொகையை முஸ்லிம்கள் திரும்பித் தந்தனர். உங்களது உரிமையை எங்களால் தர முடியாத போது உங்களிடம் பெற்ற பணத்தை நாங்கள் திருப்பித் தருகிறோம் என்று கூறிய போது அந்த கிறிஸ்தவர்கள் அழுதனர். அழுதவாறு இவ்வாறு கூறினர். அதாவது நாங்கள் துஆ செய்கிறோம். நீங்களே திரும்பி வருவீர்கள். உங்களைப் போன்ற ஆட்சியாளர்களை நாங்கள் பார்க்கவில்லை – முஸ்லிம் ஆட்சியின் கீழ் எமக்கு நீதியும் உரிமையும் கிடைத்தன. இது எங்களது ஆட்சியில் கிடைக்கவில்லை. அவர்கள் கூறினர். இப்போது முஸ்லிம் ஆட்சியாளர்கள் முஸ்லிம்களின் செல்வத்தையே எடுக்கின்றனர். நாட்டில் நீதி முடிந்து விட்டது. உரிமைகள் அபகரிக்கப்படுகின்றன. எவரது உயிரும் பொருளும் பாதுகாப்பாக இல்லை. பிறகு இறுமாப்புடன் வாதிடுகின்றனர். பொதுமக்களுக்காக நாங்கள் செய்வதை வேற எவரும் செய்யவே முடியாது. இந்தப் புரட்சி நிலை பல்வேறு நாடுகளில் உருவாகி உள்ளது. நான் ஏற்கனவே கூறியது போன்று இதிலிருந்து சுயநலமிகள் பயனடைகின்றனர். சிலர் மார்க்கத்தின் பெயரால் சுயலாபம் பெற முயலுகின்றனர். இந்த ஆட்சிகள் ஒழுங்காக உரிமைகளை வழங்கினால் நீதியை நிலைநாட்டியிருந்தால் இது ஒருபோதும் நடந்திருக்காது. பொதுமக்களின் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டிருக்கும். அரசுகளும் கூட பேராசை கொள்ளாமல் நீதியை நிலைநாட்டி இருந்தால் பிறகு எப்போதும் இக்குழப்பம் வந்திருக்காது. மார்க்கவாதிகள் பற்றி கூறினேன். பொதுமக்களுக்கு மார்க்க அறிவில்லாததால் மார்க்கத்தில் தவறான விளக்கம் மற்றும் சடங்குகளை உருவாக்கி சடங்கு சம்பிரதாயம் என்ற அரிகண்டத்தை அவர்களின் கழுத்தில் இந்த மார்க்கவாதிகள் மாட்டி விட்டு விட்டனர். இவ்வாறு அவர்கள் அடிமையாக்கப்பட்டுள்ளனர். அல்லாஹ் இந்த மகத்தான நபி (ஸல்) அவர்கள் மனித மகத்தவத்தை நிலைநாட்ட வந்தவர்களான இந்த நபியைப் பற்றி கூறுகிறான்.

இந்த நமது நபி அவர்களின் சுமையை அகற்றுகிறார். அவர்களின் கழுத்தில் மாட்டியிருந்த அந்த பளுவை துண்டிக்கிறார்.

ஆனால் இப்போது இக்காலத்தில் என்ன நடக்கிறது? முற்றிலும் தலைகீழாக உள்ளது. முஸ்லிம் நாடுகள் இந்த நபியை ஏற்றிருப்பதாக வாதிக்கிறார்கள். அவரை ஏற்ற பிறகு உரிமை, நீதி, சுதந்திரம் வழங்கல் ஆகிய செயல்களை அவர்கள் தான் செய்திருக்க வேண்டும். முஸ்லிமல்லாத நாடுகள் இவர்களின் சுதந்திரம், நீதி, வளர்ச்சிகளைப் பார்த்து முன்மாதிரியாக கொண்டிருக்க வேண்டும். ஆனால் இங்கு முற்றிலும் இதற்கு தலைகீழாக இருக்கிறது. உண்மையான இஸ்லாமியப் போதனையைப் பரப்ப வேண்டிய உலமாக்கள் எல்லா வகையான பித்அத்துகளிலிருந்தும் முஸ்லிம்களை தூய்மைப்படுத்தி இருக்க வேண்டும். அவர்களோ மக்களின் கழுத்தில் அரிகண்டத்தை போடுகின்றனர். இரு தரப்பினரும் பொதுமக்களுக்கு சுமையை ஏற்றி அமுக்கி உள்ளனர். எனவே ஆட்சியாளர்கள் மீது மட்டும் குற்றமில்லை. மாறாக இக்காலத்தின் உலமாக்களும் கூட இவர்களுடன் சேர்ந்துள்ளனர். இவர்கள் பொய்யான சடங்கு சம்பிரதாயங்கள், பொய்யான கொள்கைகளை மார்க்கப் பெயர் கூறி பொதுமக்களின் உணர்வுடன் விளையாடி அவர்களை அடிமையாக்கி விட்டனர். இத்தொடர் தொடரும். முடிவுறாது. அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவரை ஏற்காத வரை – மனித கண்ணியத்தை நிலைநாட்ட எல்லாவகையான சுமைகளையும் அரிகண்டங்களை விட்டும் விடுதலையாக்குவதற்காக வந்தவரை ஏற்காதவரை இந்த நிலை தொடரும். முழுக்க முழுக்க ஒரே அடிமைத்தனத்தின் கீழ் வருவதற்கு போதித்தார்கள். இறைவன் மற்றும் அவனது ரஸூல் (ஸல்) அவர்களுடைய அடிமைத்தனத்தின் கீழ் வருமாறு போதித்தார்கள். இந்த அடிமைத்தனத்தினால் சுதந்திரங்களின் பலவழிகள் தென்படும். நீதி தென்படும். சமத்துவம் உருவாகும். பிறகு சுதந்திரத்தின் இன்னொரு வழி தென்படும். அதில்

சமுதாயத்தில் உரிமைகளைப் பெற கிளர்ச்சி செய்ய வேண்டியதில்லை. சுதந்திரத்தைப் பெற தவறான வழியைப் பயன்படுத்த வேண்டியதில்லை. மாறாக உரிமைகளை வழங்குவதற்கு மன்னரும் முயல்வார். பரம ஏழையும் முயல்வார். எனவே முஸ்லிம்கள் இந்த எல்லா குழப்பத்திலிருந்தும் தப்பிப்பதற்கு ஒரே வழிதான் இருக்கின்றது. அது அல்லாஹ் மற்றும் அவனது ரஸூல் உடைய போதனையின்படி அமல் செய்வது ஆகும். அல்லாஹ் இக்காலத்தில் இந்த இரு வகை உரிமையையும் நிலைநாட்டுவதற்காக அனுப்பியவரை மறுத்து விட்டு அது சாத்தியமே இல்லை. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பல்வேறு கோணத்தில் மிக அழகான முறையில் இப்போதனையை நம்முன் எடுத்து வைத்துள்ளார்கள். அதுவே உரிமையையும் நீதியையும் நிலைநாட்டுகிறது. அதில் சுதந்திரத்திற்கு உத்தரவாதம் உள்ளது. நிரந்தர சுதந்திரத்திற்கு உத்தரவாதம் உள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

நினைவில் கொள்ளுங்கள். ஒரு முஸ்லிம் அல்லாஹ்வின் உரிமை மற்றும் அடியாரின் உரிமையை நிலைநாட்டுவதற்கு எப்போதும் தயாராக இருக்க வேண்டும். இறைவனை தனித்தன்மையிலும் பண்பிலும் வஹ்தஹூ லாஷரீகலஹூ என்று நாவளவில் கூறுவது போன்று அமலிலும் காட்ட வேண்டும். படைப்பினங்களுடன் அனுதாபத்துடனும் மென்மையுடனும் நடக்க வேண்டும்.

கூறினார்கள்: ஒருவருக்கொருவர் இடையிலுள்ள தொடர்பு தூய்மையாக இல்லாதவரை இறைவனுடன் உள்ள உங்கள் தொடர்பு தூய்மையாக இருக்காது. இந்த இருவகை உரிமையில் இறைவனது உரிமை பெரியதுதான். எனினும் அவனது படைப்பினத்துடன் அனுதாபம் காட்டுவது ஒரு கண்ணாடியைப் போன்றது. ஒரு சகோதரர் தனது சகோதரருடன் உள்ள தொடர்பை தூய்மையாக வைக்கவில்லை எனில் அவரால் இறைவனின் உரிமையையும் தர முடியாது. ஆனால் அசல் விஷயம் என்னவென்றால் ஒருவர் தன்னை உயர்வானவராகவும் மற்றவரை இழிவாகவும் கருதுகிறார். மற்றவரை இழிவுபடுத்த முயல்கிறார் எனில் அவரிடம் நீதி, சகோதரத்துவம் ஆகியவற்றை எதிர்பார்க்க முடியாது.

**பிறகு இன்னோரிடத்தில் கூறுகின்றார்கள்:**

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு ஜமாஅத்தை உருவாக்கினார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தூய நஃப்ஸை உடையவர்கள் ஆவார்கள். ஒவ்வொருவரும் தமது உயிரை மார்க்கத்திற்காக அர்ப்பணித்திருந்தனர். அவர்களில் ஒருவரும் நயவஞ்சக வாழ்க்கை வாழவில்லை. அனைவரும் அல்லாஹ்வின் உரிமையையும் அடியாரின் உரிமையையும் வழங்குபவர்களாக இருந்தனர். மார்க்கம் உலகின் மீது முன்னுரிமை பெறும் போதுதான் இந்நிலை உருவாகும். அது பணிவு மிக்கவராக இறைவனின் உரிமையை தருபவராக்குகிறது. படைப்பினத்தின் உரிமையை தருவதன் பக்கமும் கவனம் ஏற்படுத்துகிறது. முஸ்லிம்களில் – முஸ்லிம் நாடுகளில் அத்தகைய ஒரு தலைவரைக் கூட இத்தகைய தகுதியை நிலைநாட்டியவரை இன்று நம்மால் காண முடியவில்லை. உண்மையான நீதியை விரும்பும் வழிகாட்டியில்லை எனில் பிறகு ஒவ்வொருவரும் தமது விடுதலைக்காக தமக்குத் தெரிந்த படி செயல்படத் தொடங்குகின்றனர். நான் ஏற்கனவே கூறியது போன்று பிறகு சுயநலவாதிகள் தமது நலனைப் பெறுகின்றனர். பிறகு நீதி, விடுதலை என்ற பெயரில் அநீதியின் புதிய கதைகள் ஆரம்பமாகின்றன. இக்கால விடுதலைகள் எல்லாம் விடுதலை என்ற பெயரில் ஒரு அடிமைத்தனத்தில் இருந்து அகன்று இன்னொரு அடிமைத்தனத்தில் நுழைவதுதான். ஆப்பிரிக்காவின் பெரும்பாலான நாடுகளைப் பாருங்கள். அல்லது மற்ற முஸ்லிம் நாடுகளைப் பாருங்கள். இதே நிலைதான் தென்படுகிறது. மற்றவரின் அடிமைத்தனத்தில் இருந்து விடுதலை கிடைத்தால் நம்மவர் அவர்களை சுற்றி வளைக்கின்றனர். முஸ்லிம் நாடுகளின் தலைவர்களும், ஆப்பிரிக்க நாடுகளின் தலைவர்களும் அரசியல்வாதிகளும் இராணுவமும் புரட்சி என்ற பெயரில் நாடுகளைக் கைப்பற்றுகின்றன. மார்க்கத் தலைவர்கள் அல்லது உலமா என்று அழைக்கப்படுபவர்கள் அனைவரும் இந்த உண்மைகளைப் புரியுமாறு அல்லாஹ் செய்வானாக. அவர்கள் தமது சமுதாயத்தை அடிமைத்தனத்தில் பிணைப்பதை விட்டும்,

நீதியில் செல்லாமல் இருப்பதை விட்டும், பிறரது உரிமையை வழங்காமல் இருப்பதை விட்டும் விலகாமல் அல்லாஹ்வின் பிடியில் வருவார்கள். ஒவ்வொரு மேய்ப்பரும் கேட்கப்படுவர். மேய்ச்சலின் உரிமையைச் செலுத்தினீரா என்று கேட்கப்படும். உமது பொறுப்பை நிறைவேற்றினீரா? அல்லது சமுதாய செல்வத்தால் உங்கள் பையை நிறைத்துக் கொண்டிருந்தீரா? அல்லது இஸ்லாம் அல்லாஹ் ரஸூல் உடைய பெயரை சொல்லிக் கொண்டிருந்தீரா? அல்லது அந்த பெயர்களுக்கு எந்த மதிப்பும் வழங்கவில்லையா? இவற்றுக்கெல்லாம் இல்லை என்று கூறும் போது நிச்சயமாக இறை பிடியில் வருவர். இறைவனிடம் பொய் சொல்ல முடியாது. இறைவனிடம் எதனையும் மறைக்க முடியாது.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: உண்மையான மூஃமின் லிஅமானத்திஹிம் வஅஹ்திஹூம் ராஊன். (23:9) அவர்கள் தனது அமானிதங்களையும், உடன்படிக்கைகளையும் கவனத்தில் கொள்வார்கள். தலைவர்கள் தமது அமானிதம் குறித்து கேட்கப்படுவர். குறிப்பாக அவர்கள் தமது உறுதிமொழியை ஏற்கும்போது இறைவனை சாட்சியாக்கவும் செய்கின்றனர். நாட்டின் நலன், பொதுமக்களின் முன்னேற்றம் அவர்களின் உரிமையை வழங்குவது, நீதியை நிலைநாட்டுவது, அவர்களின் சுதந்திரத்தை எப்போதும் பேணுவது ஆகியவற்றை நிறைவேற்றுவேன் என்று உறுதிமொழி எடுக்கின்றனர். ஆனால் பெரும் துரதிஷ்டம் என்னவென்றால் பெரும்பாலான இடங்களின் சமுதாயத்தின் செல்வத்தை தம் பக்கம் திரும்புவதை இங்கு பார்க்கிறோம். உலமாக்கள் மார்க்கத்தை சம்பாதிக்கும் வழியாக்கி உள்ளனர். பொதுமக்களுக்கு தவறான சடங்கு சம்பிரதாயங்கள் போதனைகள், தவறான கொள்கைகள் என்ற அரிகண்டத்தைப் போட்டு விடுகின்றனர். நான் ஏற்கனவே கூறியது போன்று முழுக்க முழுக்க தமக்கு கீழ் கொண்டுவர முயலுகின்றனர். பொதுமக்களும், தமது உரிமைகளை வழங்குவதில்லை.

சுருக்கமாக அமானிதத்தை பேனாததன் விளைவாகவும் இறை தண்டனையை எல்லாரும் அழைக்கின்றனர். இக்காலத்தில் இந்த நாடுகளில் உருவாகியுள்ள குழப்பங்கள் இறைவனின் பழிவாங்கும் பண்பின் விளைவாகும். தீவிரவாதம், சமூகச் சீர்கேடு, பொருளாதார பின்னடைவு அமைதியின்மை இக்கால நிலை மட்டுமல்ல. மிகக் கடும் நிம்மதியின்மை தரும் எதிர்காலத்தை அடையாளம் காட்டுபவையும் ஆகும்.

உதாரணமாக, பாகிஸ்தான் சுதந்திரம் பெற்று 62-63 வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் இந்த எல்லா விஷயங்களும் அங்கு உச்ச நிலையில் உள்ளது. அதிகமாகிக் கொண்டே தான் உள்ளது. நாளை என்ன நடக்கும்? என்று எவரும் கூற முடியாது. நாம் நல்ல எதிர்காலம் ஏற்படும் என்று எதை வைத்து நம்பிக்கை வைப்பது? ஆங்கிலேயர்களிடம் அடிமைப்படுவதில் இருந்து நமக்கு விடுதலை கிடைத்து விட்டதுதான். ஆனால் நம்மவரின் அடிமைத்தனம் இன்னும் அதிகமாக தொல்லைப்படுத்துகிறது. அல்லாஹ் நம் நாட்டின் ஆட்சியாளர்களின் மீதும் பொதுமக்கள் மீதும் கருணை காட்டுவானாக. காயிதே அஃஸம் பாகிஸ்தான் சுதந்திரம் பெற்ற பிறகுதான் இவ்வாறு அறிவித்தார். மார்க்கவாதிகளுக்கு மார்க்க சுதந்திரம் உண்டு. பாகிஸ்தானிய குடிமகன் என்ற முறையில் அனைவருக்கும் சம உரிமை உண்டு. ஆனால் அஹ்மதிகளுடன் என்ன செய்யப்படுகிறது? அஹ்மதிகளின் மீது தவறான விஷயங்கள் சுமத்துகின்றனர். காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்களுடைய அடிமைத்தனத்தின் கீழ் இருப்பதை ஒவ்வொரு அஹ்மதியும் ஆயிரக்கணக்கான விடுதலையை விட முன்னுரிமைக்குரியதாக கருதுகிறார். தமது கழுத்தை வெட்டப்படுவதற்கும் தயார் என கருதுகிறார். அந்த அஹ்மதிகளின் மீது இட்டுக்கட்டி அஹ்மதிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை பழிப்பவர்கள் என்று கூறப்படுகிறது நவூதுபில்லாஹ். நாம் குடிமகன் என்ற உரிமையிலிருந்து விலக்கப்பட்டதை பொருட்படுத்தவில்லை. அல்லது பொருட்படுத்தத் தக்கதாகவும் நினைக்கவில்லை. நம்மை எல்லா உரிமைகளிலிருந்து விலக்கினாலும் அதனை சகிப்போம். சகித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த பெயர்தாங்கி உலமாக மற்றும் ஆட்சியாளர்களின் விருப்பத்திற்கேற்ப எம்மை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களை விட்டு பிரிந்தவர்களாக கருத முடியாது. அஹ்மதிகள் ஏன் பாகிஸ்தானில் தேர்தலில் வாக்களிக்கும் உரிமையை பயன்படுத்த முடியாது? ஏனென்றால் இவர்கள் கூறுகின்றார்கள்: உங்கள் இந்த உரிமையையும்

சுதந்திரமும் ஒரு நிபந்தனைக்கு உட்பட்டதாகும். அந்த நிபந்தனையாவது நீங்கள், நாங்கள் முஸ்லிம்களல்லர் என்று கூற வேண்டும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை நாங்கள் சார்ந்தவர்களல்ல என்று கூற வேண்டும். இறைவன் மீது ஆணை! அஹ்மதிகளாகிய எம்மை துண்டு துண்டாக்கி விடலாம். ஆனால் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எமது எஜமானரும் தலைவரையும் விட்டுப் பிரிவதால் கிடைக்கும் அந்த சுதந்திரம் மற்றும் வாக்களிக்கும் உரிமையின் மீது எச்சில் கூட உமிழவும் மாட்டோம். அது உம்போன்ற உலகவாதிகளுக்கு தான் வாழ்த்துக்குரியது. அத்தகைய விடுதலையை விட ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய செருப்பின் தூசியாக எம்மை ஆக்கி அல்லாஹ்வின் உண்மையான அடியாராக்குகின்ற அல்லாஹ்விற்குரிய உரிமையை வழங்குபவர்களாக்கக் கூடிய அடியார்களுக்குரிய உரிமையை வழங்கும் உணர்வு பெற்றவர்களாக்கக் கூடிய அந்த அடிமைத்தனத்திற்கு முன்னுரிமை தந்து விட்டோம்.

இன்ஷா அல்லாஹ் ஒருநாள் வரும். நமது இந்த எளிமை அடிமைத்தனம் தான் உலகிற்கு உண்மையான சுதந்திரத்தின் காட்சியைக் காட்டும். தம்மைத் தாமே விடுதலை பெற்றவர்கள் என்போர் பல்வேறு துன்பங்களல் வதைக்கப்படுகின்றவர்கள் சுமைகளையும் அரிகண்டங்களையும் கொண்டவர்கள் இவர்கள் அல்லது இவர்களது சந்ததிகள் முஹம்மதிய மஸீஹின் அடிமையாக இருப்பதில் ஒருநாள் மகிழ்ச்சி அடையும். அதிலேயே அவர்களுக்கு உண்மையான சுதந்திரத்தின் உணர்வு கிடைக்கும். அதனை நிலைநாட்டவே ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா காத்தமுல் அன்பியா (ஸல்) அவர்கள் வந்தார்கள். அல்லாஹ் உலகின் இந்த விடுதலையின் நாளை விரைவில் பார்க்கச் செய்வானாக. அல்லாஹ்வினால் அனுப்பப்பட்டவரை மறுப்பதன் விளைவாக ஏற்படும் பயங்கர விளைவுகளில் இருந்து பாதுகாக்கப்படுவார்களாக. அல்லாஹ் நமது ஒவ்வொரு அஹ்மதிக்கும் இந்த கடினமான நாட்களை பொறுமை, நிலைத்து நிற்றல் மற்றும் துஆவில் கழிக்கும் வாய்ப்பை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 25.11.2011**

Translated by : Muallim M. NIZAMUDDIN

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456